**செய்தி வெளியீடு எண்:515** **நாள் : 13.10.2014**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை, டோல்கேட், பொது விநியோகத் திட்ட கிடங்கில் 13.10.2014 அன்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ், அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

கிடங்குகளில் சேமிப்பில் வைக்கப்பட்டிருந்த புழுங்கல் அரிசி, பச்சரிசி, சர்க்கரை, கோதுமை, சிறப்பு பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் ஆகியவை அனைத்து நியாய விலை அங்காடிகளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் இயக்கம் செய்யப்படுவதை ஆய்வு செய்தார். அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் போதுமான அளவில் கையிருப்பில் உள்ளதாகத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக் கொள்ளும் வகையில் 15.10.2014க்குள் அனைத்து அங்காடிகளுக்கும் அக்டோபர் மாதத்திற்கான ஒதுக்கீட்டினை இயக்கம் செய்து முடிக்க வேண்டுமென அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மேலும், வீரராகவன் தெரு, அமுதம் நியாய விலை அங்காடிகள் எண். 036, 038, 039 ஆகியவற்றை ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள் பொது மக்களுக்கு தேவையான பொருள்கள் கையிருப்பில் வைத்து சீரான முறையில் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்தார். அங்காடியில் இருந்த குடும்ப அட்டைதாரர்களிடம் பொருள்கள் விநியோகம் தொய்வின்றி நடைபெறுவதை கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு.சு.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., மற்றும் சென்னை முதுநிலை மண்டல மேலாளர் திருமதி.எஸ்.நிர்மலா ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**